# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 376/2023 அ.சா.8

Name : திருமதி. பனையம்மாள்

Father's name :

Village :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.08.2026.

**( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது வஞ்சி நகரத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 22.05.2022ம் தேதி மதியம் 12.30 மணியளவில் என் பக்கத்து வீட்டில் குடியிருக்கும் எனது மருமகன் வீட்டில் சமைத்து கொண்டிருக்கும்போது அவரிடம் நான் நமது வீட்டிற்கு வடக்காக உள்ள கருங்காலக்குடி மொல்லமலை சோலமலை வயல் அருகில் ஒருவனை போட்டு ஆறு பேர் அடித்து கொண்டிருக்கிறார்கள் என்றும் அதை போய் பார் என்று சொன்னேன் என்றும், அதனை எனது மருமகன் போய் பார்த்துவிட்டு அதே ஊரைச் சேர்ந்த 1வது எதிரி மற்றும் அடையாளம் சொல்லக்கூடிய 5 பேர்கள் இறந்த பெரியகருப்பனை கீழே போட்டு மிதித்து

கொண்டிருந்தார்கள் என்றும், அதனை தடுக்கபோன எனது மருமகனை ஒழுங்காக போய்விடு இல்லையென்றால் எனது மருமகனையும் கொன்றுவிடுவோம் என்று மிரட்டியதாகவும் அவர் பயந்து போய் வீட்டிற்கு வந்தவுடன் செல்வத்திற்கு போன் செய்து பெரியகருப்பன் என்பவர் இறந்துகிடக்கிறான் என்று நானும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :– இல்லை**

**மறு விசாரணை –** இல்லை.

Sd/- பனையம்மாள்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.08.10 06:18:02 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.